விருதுநகர் அரசு மருத்துவமனை.

*வினா எண் 1040— திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விருதுநகரில் அரசு மருத்துவமனையில் உள்ள இட நெருக்கடியைத் தவிர்க்கக் கூடுதல் படுக்கை வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடம் அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தற்சமயம் இல்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் அரசு மருத்துவமனையில் ஏராளமான உள் நோயாளிகள், படுக்கை வசதி இல்லாமல் தரையில் படுக்கக் கூடிய நிலைமையில் கஷ்டப்படுகின்றனர். அதை உடனடியாக மாற்றி அமைக்கும் வகையில் அங்கே கூடுதல் கட்டிடம் கட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக உத்தரவு வழங்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்சமயம் இல்லை என்று தான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு, அந்தப் பகுதி மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று, இங்கே ஒரு பெட்டிஷன் மூலமாக கொடுப்பார்களேயானால், அதை மீண்டும் ஆராயலாம். அதை ஒரு பெரிய மருத்துவமனையாக கொண்டு வரவேண்டும் என்கிற நிலைமை இருக்கிற காரணத்தால், இரண்டு பிரச்னைகளையும் தீர ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும் என்றுதான், தற்சமயம் இல்லை என்று நான் பதில் அளித்தேன்.

வடாற்காடு மாவட்டத்தில் பெரியார் போக்குவரத்துக் கழக பெருந்துகள் செல்லும் வழித்தடங்கள்.

*வினா எண் 1041— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் பெரியார் போக்குவரத்து கார்ப்பரேஷன் அரசு அனுமதி பெற்ற பலவழித் தடங்களில் பேருந்துகள் விடப்படாமலிருப்பது உண்மையா?

(ஆ) அதன் விவரமென்ன?

(இ) காரணமென்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) வடாற்காடு மாவட்டத்தைப் பொருத்தமட்டில் தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகம் அரசு அங்கீகாரம் பெற்ற எல்லா வழித்தடங்களிலும் பேருந்துகளை இயக்குகிறது.

(ஆ) மற்றும் (இ): கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9.30)

1981 மே 14]

[முற்பகல் 9.30]

திரு. தி. அன்பழகன்: வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலிருந்து பெருமாப்பட்டு கிராமத்திற்கு அரசு அனுமதி தந்தும் பேருந்து விடப்படாமல் இருக்கிறது. அதுபோன்ற வழித்தடங்கள், அனுமதி பெற்ற வழித்தடங்கள் காலாவதியாகி விட்டால் அவை புதுப்பிக்கப்பட்டு புதிய பேருந்துகள் விடப்படுமா? பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் போதிய வண்டிகள் இல்லையென்பதால் புதிய வண்டிகள் விடுவதற்கு அரசாங்கம் ஏதாவது சிறப்புத் திட்டம் தீட்டி செயல்படுத்தியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அரசாங்க அங்கீகாரம் கொடுத்தும் அங்கே பேருந்துகள் இயக்காமல் பெரியார் போக்குவரத்துக்கழகத்தில் எந்தயிடத்திலும் இல்லை. அங்கே பேருந்துகள் தேவையான அளவிற்கு இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அரசாங்கம் அங்கீகாரம் கொடுத்துவிட்டால் எப்படியாவது பேருந்துகள் வாங்கி விட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே அங்கீகாரம் கொடுக்கப்பட்ட பிறகு எந்தயிடத்திலும் பேருந்துகள் இயக்காமல் இல்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் போக்குவரத்து எங்கெல்லாம் இயங்கவேண்டுமென்று கேட்கிறார்களோ கூடியவரை அங்கெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அங்கீகாரம் முதலில் கொடுப்பதில்லை. காரணம் நாம் அதை நிறுத்தி வைத்திருக்கிறோம். அரசாங்கத்தால் அங்கீகாரம் கொடுக்கப்பட்ட இடம் விடுபட்டிருக்கிறது என்ற நிலைமை இப்போது இல்லை.

திரு. கே. நாராயணசாமி: திருவண்ணாமலை முனிசிப்பாலிட்டி பெரிய முனிசிப்பாலிட்டி. அறுபது ஆண்டுகளாயிற்று. அந்த ஊரில் ஒன்பது வழித்தடங்கள் இருக்கின்றன. எல்லா வழித்தடங்களிலும் டவுன்பஸ்கள் விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேருந்துகள் தேவை என்ற நிலைமை இருக்குமானால் பேருந்து விட அரசு தயக்கம் காட்டாது.

திரு. ஏ. சி. சண்முகம்: பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் அங்கீகாரம் இல்லாத பல வழித்தடங்களில் பேருந்துகள் விடப்படாமல் இருக்கின்றன. அதன் தலைமையிடம் விழுப்புரத்தில் இருக்கிறது என்பதால் சென்னையிலிருந்து 100 மைல் தொலைவில் இருக்கிறது—நிர்வாகத்தில் பல பிரச்னைகள் உள்ளன. அது போதிய அளவுக்கு கவனிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே பெரியார் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரை தலைமையிடமாக வைத்து ஒரு கழகம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: கடந்த 27-ம் தேதி அன்று நான் மானியக்கோரிக்கையின் போதே அறிவித்திருக்கிறேன். பல்லவன் போக்குவரத்துக் கழகம் புறநகர் பிரிவு பெரியார்

போக்குவரத்துக் கழகம் இவை பின்னிப் பிணைந்திருப்பதால் அதை ஒன்றாகச் சேர்த்து பிரிக்கவேண்டும் என்ற திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். விரைவில் வேலை தொடங்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் குடியாத்தத்திலிருந்து பல்வேறு கிராமங்களுக்கு குறிப்பாக குடியாத்தம்—தட்டப்பாறை, குடியாத்தம்—கொச்சூர் போன்ற யிடங்களுக்கு டவுன் பஸ் விடவேண்டுமென்றும், பல்வேறு தூரயிடங்களுக்கு சேலம், பங்களூர், பாண்டிச்சேரி போன்றயிடங்களுக்கு பேருந்துகள் விடவேண்டுமென்றும் கோரியிருந்தோம். அவைகளை துரிதமாகவிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய எழுதிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர்கள் எழுதிக் கொடுக்கிற அத்தனை வழித்தடங்களுக்கும் வண்டி விடவேண்டுமென்றால் இந்த ஆண்டு மட்டும் ஐயாயிரம் பேருந்துகள் வாங்குவது என்பது முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிகிறது. இருந்தாலும் அவற்றில் எவை எவை முக்கியமானவை என்று பார்த்து அங்கு வண்டிகள் விட அரசு தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது.

வடாற்காடு மாவட்டத்தில் தனியார் துறை மூலம் நடைபெற்று வரும் பேருந்துப் பணிகள்.

*வினா எண் 1042—திரு. சி. கோபால்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் தனியார் துறை பேருந்து அதிபர்கள் பினாமி பெயரில் பேருந்துகளை நடத்தி வருவதை தடுக்கும் எண்ணம் இவ்வரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பினாமி பெயரில் பேருந்து உரிமங்கள் வழங்குவது மோட்டார் வண்டிகள் சட்டத்தில் தடுக்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு மாவட்டத்தில் தனியார் துறை பேருந்து அதிபர்கள் பினாமி பெயரில் பேருந்துகளை நடத்துவதாக அரசுக்கு எவ்விதத் தகவலும் இல்லை.

திரு. சி. கோபால்: பேருந்துகள் உரிமங்கள், சட்டப்படி பினாமி பெயரால் நடத்தப்படுபவை மோட்டார் வாகனச் சட்டப்படி தடுக்கப்படுகிறது என்று கூறினார்கள். சட்டத்தில் இருக்கிற ஓட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டு பெரும் முதலாளிகள் பலர் பினாமி பெயர்களில் வட ஆற்காடு மாவட்டத்தில் நடத்தி வருகிறார்கள் என்பதால் ஏதாவது தனிக் குழு ஒன்று அமைத்து அமைச்சர் அவர்கள் அதை பரிசீலிப்பார்களா?